**தமிழ்நாடு அரசு**

# நெடுஞ்சாலைத்துறை
# கட்டுமானம் (ம) பராமரிப்பு

**நாகர்கோவில் கோட்டம்**

ந.க.எண்.3929/ஆ1/2025, நாள் 17.10.2025

## விளம்பரம் வேலைவாய்ப்பு அறிவிக்கை

**(அரசாணை எண்.44, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு (T2) துறை நாள். 11.03.2015இன் கீழ் வெளியிடப்படுகிறது).**

நாகர்கோவில் (நெ), க(ம)ப கோட்டத்தில் காலியாகவுள்ள 2 அலுவலக உதவியாளர்கள் மற்றும் 3 அலுவலக காவலர்கள் பணியிடத்திற்கு அரசாணை எண்.169/போக்குவரத்து துறை (நெ), நாள்.16.02.1983–இன் படி, கன்னியாகுமரி மாவட்டத்தினை இருப்பிடமாகக் கொண்ட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | காலிப் பணியிடங்கள் | ஒதுக்கீடு விபரம் | தகுதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 அலுவலக உதவியாளர் | ஆதிதிராவிடர் | 1. | வயது 01.07.2025 அன்று | SC | 18-35 |
| | | | 2. | கல்வித் தகுதி | 8–ஆம் வகுப்பு தேர்ச்சி | |
| | | | 3. | ஊதிய விகிதம் | ரூ.15700 – 58100 (நிலை–1) | |
| 2 | 3 அலுவலக காவலர் | ஆதிதிராவிடர் | 1. | வயது 01.07.2025 அன்று | SC | 18-35 |
| | | | 2. | கல்வித் தகுதி | 8–ஆம் வகுப்பு தேர்ச்சி | |
| | | | 3. | ஊதிய விகிதம் | ரூ.15700 – 58100 (நிலை–1) | |

### நிபந்தனைகள்

1. விண்ணப்பிக்க விரும்பும் நபர்கள் தனித்தாளில் தங்கள் பெயர், பிறந்த தேதி, வயது, கல்வித்தகுதி, சாதி மற்றும் இருப்பிட முகவரி போன்ற சுயவிபரங்களைக் குறிப்பிட்டும் இருப்பிடச்சான்றிதழ் மற்றும் 2 அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களிடமிருந்து நாளது தேதியில் பெறப்பட்ட நன்னடத்தைச் சான்றுகளுடன் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். இதற்கென தனியாக விண்ணப்பங்களோ/ படிவங்களோ அங்கீகரிக்கப்படவில்லை. உரிய சான்றுகள் இணைப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
2. கீழ்க்கண்ட முகவரிக்கு தபால் மூலமாக 14.11.2025 பிப. 5.45 மணிக்குள் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற வேண்டும். காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
3. விண்ணப்பதாரர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள், இடம் ஆகியவை குறித்த விவரங்கள் தனியே கடிதம் மூலமாக (Call Letter) தெரிவிக்கப்படும்.
4. பணியிடங்களுக்கான தகுதியான நபர்கள் நேர்முகத்தேர்வில் பெறும் மதிப்பெண் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள்.
5. நேர்முகத்தேர்வில் கலந்து கொள்வதற்கு பயணப்படி எதுவும் வழங்கப்பட மாட்டாது.
6. விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் சரிபார்ப்பில் அசல் ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.
7. சான்றிதழ் சரிபார்ப்பில் திருப்திகரமான விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.
8. தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு வழங்கப்படும் பணிநியமனம் முற்றிலும் தற்காலிகமானது. இப்பணி நியமனத்தினை எந்த நேரத்திலும் ரத்து செய்யும் அதிகாரம் கோட்டப்பொறியாளருக்கு உண்டு.

**அலுவலக உதவியாளர் மற்றும் அலுவலக காவலர் பதவிக்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி**

**கோட்டப்பொறியாளர்,**
**நெடுஞ்சாலை,**
**கட்டுமானம் (ம) பராமரிப்பு,**
**பொதுப்பணித்துறை அலுவலக வளாகம்,**
**வேப்பமூடு சந்திப்பு, நாகர்கோவில்,**
**கன்னியாகுமரி மாவட்டம் - 629 001.**

**கோட்டப்பொறியாளர் (நெ),**
**கட்டுமானம் (ம) பராமரிப்பு,**
**நாகர்கோவில்.**

வெ.ஆ.எண்:279/செ.ம.தொ.அ/ககு/17–10–2025